
*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# ஏழு சபைகள்
# பிலதெல்பியா – உண்மையுள்ள சபை

***வெளி 3:7-13, "பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; 8. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். 9. இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன். 10. என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும் படி நானும் உன்னைக் காப்பேன். 11. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. 12. ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும்***

***நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதியநாமத்தையும் அவன்மேல் எழுதுவேன். 13. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.”***




*பரிபூரண சபை என்று ஒன்று இல்லை, பரிபூரண கிறிஸ்தவர் என்று ஒருவரும் இல்லை.*

*சபை என்பது அபூரண கிறிஸ்தவர்களின் தொகுப்பாகும், எனவே, அது அபூரணமானது.*

*பரிபூரண போதகர் இல்லை. நாம் அனைவரும் அபூரணர்கள். தேவன் நிர்ணயித்த பரிசுத்தத்தன்மையின் முழுமையான தரத்தை நாம் அனைவரும் எப்போதும் அடைவதில்லை.*

ஆனால் ஒரு பரிபூரண கிறிஸ்தவர், அல்லது ஒரு பரிபூரண போதகர் அல்லது ஒரு பரிபூரண சபை என்று ஒன்று இல்லை என்று கூறும்போது, கர்த்தர் விரும்பும் எல்லாவற்றையும் நம்மில் யாரும் முழுமையாக ஒரு சபையாக நிறைவேற்ற முடியாது. ஆனால் ஒரு சபையாக தேவனை பிரியப்படுத்த உண்மையுள்ள, கீழ்ப்படிதலுடன், விடாமுயற்சியுடன் இருக்க இன்னும் சாத்தியம் உள்ளது.

அந்த சபை அவருக்கு உண்மையாக அவருக்கு விசுவாசமாக இருந்தால்,தேவன் ஆசீர்வதிக்கும் ஒரு சபையாக இருக்க முடியும். பிலதெல்பியாவில் உள்ள சபையில் இதைத்தான் நாம் காண்கிறோம்.

இது ஒரு சிறிய சபை, 8 வது வசனத்தின்படி ஒரு சிறிய பெலனை கொண்டுள்ளது.
சபையின் அளவு சிறியது. இது ஆசியா மைனரில் பிலதெல்பியால் உள்ள ஒரு சிறிய சபை.

இந்த சபை சிமிர்னாவில் உள்ள சபையை போலவே கர்த்தராகிய இயேசுவிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெறுகிறது,

- ✓ எச்சரிக்கைகள் எதுவும் இல்லை,
- ✓ கண்டனங்கள் எதுவும் இல்லை,
- ✓ அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை, மற்றும்
- ✓ நியாய தீர்ப்புகள் எதுவும் இல்லை.

தேவனுக்கு பிரியமான மற்றும் அவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சபை.

## *பிலதெல்பியா:*

*பிலதெல்பியா ஆசியா மைனரில் சர்தை க்கு தென்கிழக்கே 30 மைல் தொலைவில் இருந்தது. 189 இல் பெர்கமூவின் மன்னரான அட்டலஸ் Attalus அந்த பகுதிக்கு வந்த பிறகு இது நிறுவப்பட்டது.*

*அட்டலஸ், பிலதெல்பியா என்று செல்லப்பெயர் பெற்றார், ஏனெனில் அவர் தனது சகோதரரிடம் ஒரு சிறப்பு அன்பு கொண்டவர் என்று அறியப்பட்டார், அது அவர் நிறுவிய நகரத்தின் பெயராக மாறியது. இது விவசாயத்தில் ஈடுபாடுள்ள நகரம், இங்கு எரிமலை சாம்பல் விவசாயத்திற்கு உதவியது.*

*நகரம் ஒரு நீண்ட பள்ளத்தாக்குக்கு மேலே ஒரு மலையில் ஸ்தாபிக்கப்பட்டது. எரிமலை சாம்பல் இப்பகுதியில் எரிமலை நடவடிக்கை மற்றும் பூகம்பங்கள் இருப்பதைக் குறிக்கிறது.*

*இந்த நகரம் கிரேக்க-ஆசிய நாகரிகத்தின் Greco-Asiatic civilization மையமாக இருந்தது, ஏனெனில் இது மேற்கில் கிரேக்கத்திற்கும் கிழக்கில் ஆசியாவிற்கும் இடையேயான பாதையில் இருந்தது.*

*அவர்கள் லிடியன் Lydian என்ற மொழியைப் பேசினர், அது கி.பி 19 க்குள் போய்விட்டது. கிரேக்க மொழியை உண்மையில் பரப்புவதிலும், லிடியன் பிராந்தியத்தின் மொழியை மாற்றுவதிலும் இந்த நகரம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இது கிரேக்க கலாச்சாரத்தை பின்னோக்கி, கிழக்கு நோக்கி தள்ளியது. இது கிழக்கு நோக்கி வர்த்தக பாதையில் இருந்த ஒரு நகரம். இது ஒரு ஏகாதிபத்திய சாலை imperial road,*

*கி.பி முதல் நூற்றாண்டில் ஒரு ஏகாதிபத்திய சாலை நிறுத்தம் ஆக இது இருந்தது. ஒரு காலத்தில், மிகப் பெரிய வர்த்தக பாதைகளில் ஒன்று இந்த நகரத்தின் கிழக்கு மற்றும் மேற்கு வழியாக இருந்தது.*

*கி.பி 17 இல், ஒரு சக்திவாய்ந்த பூகம்பம் சர்தை மற்றும் பிலதெல்பியா உள்ளிட்ட 12 நகரங்களை அழித்தது. கி.பி 60 இல் மீண்டும் ஒரு பூகம்பம் லாவோதிகேயாவை அழித்தது. அவர்கள் அனைவரும் வெடித்து கொண்டு இருக்கும் எரிமலைகள் இருந்த இந்த பகுதியில் வாழ்ந்தனர்.*

*பேரரசர், சீசர் திபெரியஸ் the Caesar Tiberius,, பிலதெல்பியாவை மீண்டும் உருவாக்க உதவினார். எனவே, அவருக்கு ஒரு நினைவுச்சின்னம் செய்யப்பட்டு, அங்கு அவர் வழிபடப்பட்டார்.*

## ***பிலதெல்பியாவில் சபை:***

*சபையை பற்றி நமக்கு எந்த தகவல்களும் இல்லை.*

***அப்போஸ்தலர் 19:10, இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.***

*நற்செய்தி எபேசுவிலிருந்து ஆசியா மைனர் முழுவதிலும் பரவியதால், பிலதெல்பியாவில் சபை நிறுவப்பட்டது.*

*முதல் நூற்றாண்டின் இறுதியில் இஓவான் இந்த வெளிப்படுத்தின சுவிசேஷத்தை எழுதிய சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஆரம்பகால சபையின் தந்தை*

*இக்னேஷியஸ் பிலதெல்பியா வழியாக ரோமிற்கு சென்றார், அவர் ரோமில் இரத்த சாட்சியாக மரித்தார்.*

*பிலதெல்பியாவைச் சேர்ந்த சில விசுவாசிகள் சிமிர்னாவில் பாலிகார்ப் Polycarp உடன் இரத்த சாட்சியாக கொலை செய்யப்பட்டனர்.*

*சபை பிலதெல்பியாவில் பல நூற்றாண்டுகளாக நீடித்தது, பதினான்காம் நூற்றாண்டில் முழு பிராந்தியமும் முஸ்லிம்களால் கைப்பற்றப்படும் வரை இந்த சபை உறுதியாக இருந்தது.*

## ***கடிதத்தின் ஆசிரியர்:***

*V7,* ***பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது:***

*வெளிப்படுத்துதல் 1 ஆம் அதிகாரத்தில் உள்ள தரிசனத்தில் ஆசிரியர் பற்றிய முதல் விளக்கம் இல்லை.*

***அவர் பரிசுத்தர்***
*இது தேவனை தவிர வேறு எவரையும் குறிக்க முடியாது.*
***ஏசாயா 6:3, ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.***

*யோவான் சுவிசேஷ புத்தகத்தில் உள்ள தேவனின் தரிசனம் ஆனது அது தேவ குமரனின் தரிசனம் ஆகும். அவரே பரிசுத்தர்.*

***யோவான் 6:69, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.***

***வெளி 4:8, அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.***

*தேவன் பரிசுத்தர், கிறிஸ்துவும் பரிசுத்தர். ஆகவே, எழுத்தாளர் "அவர் பரிசுத்தர்" என்று அறிமுகப்படுத்தப்படுவதையும், நிச்சயமாக, அது தேவன் தான் என்பதையும் இங்கே காணலாம்; கிறிஸ்து தேவன் என்பதால், அது அவரைக் குறிக்கிறது.*

***மாற்கு 1:24, அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்.***

*மேசியாவுக்கு இது ஒரு பொதுவான நாமம் ஆகும்.*

*கர்த்தராகிய இயேசு,தேவனின் பரிசுத்தத்திற்கு ஈடானவர். அவர் தான் தேவன்; அவர் தான் பரிசுத்தர்.*

***1 பேதுரு 1:15-16, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். 16. நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.***

*இது மிகவும் பயமுறுத்தும் அறிமுகமாக இருக்கலாம், ஏனெனில் பரிசுத்தத்தால் பாவத்தை பொறுத்துக்கொள்ள முடியாது. பரிசுத்தத்தால் அக்கிரமத்தைப் பார்க்க முடியாது, தீமையைப் பார்க்க முடியாது, ஆனாலும், பரிசுத்தர் தன்னை அப்படி அறிமுகப்படுத்திக் கொள்கிறார், மேலும் எந்தக் கண்டிப்பையும், அச்சுறுத்தலையும், எச்சரிக்கையையும், கண்டனத்தையும், இந்த சபையின் மீது எந்த தீர்ப்பையும் தேவன் அளிக்கவில்லை. இந்த சபையை பற்றி பேசுகிறவர் ஒரு பரிசுத்தர்.*

*V7,* ***சத்தியமுள்ளவரும்,***

***வெளி 6:10, அவர்கள்: <u>பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே,</u> தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.***

*தேவனின் முழுமையான குணாதிசயத்தை இரண்டு அற்புதமான பண்புக்கூறுகள்: பரிசுத்தம் மற்றும் சத்தியம்.*

*அவர் சத்திய தேவன், இயேசு தான் தேவன். அவர் தனிப்பட்ட முறையில் பரிசுத்தர் மற்றும் சத்திய தேவன். அவர் தம்முடைய நீதியில் பரிபூரணர், அவருடைய குணத்திலும் அவர் சொல்லும் எல்லாவற்றிலும் அவர் சத்தியமானவர்.*

*இயேசு தான் சத்தியம், அவருடைய சத்தியம் ஒரு முழுமையான தரநிலை, அந்த சத்தியத்தை வைத்து தான் ஒவ்வொரு பொய்யும் அளவிடப்படுகிறது, அப்போது மற்றவை எல்லாம் குறைவாக தெரியும்.*

- *அவர் பாவத்தை பொறுத்துக்கொள்ள முடியாத பரிசுத்த தேவன்.*
- *பிழையோ பொய்யோ அனுமதிக்காத உண்மையான சத்திய தேவன் அவர்தான்.*

*இருப்பினும் அவர் இந்த சபையை கண்டிக்கவில்லை.*

***V 7, தாவீதின் திறவுகோலை உடையவரும்**,*

*வெளிப்படுத்துதல் புத்தகத்தில் இரு முறை அவர் தாவீதின் சந்ததியில் வந்தவர் என்று என்று அழைக்கப்படுகிறார். இங்கே, அவர் தாவீதின் திறவு கோலை வைத்திருக்கிறார்.*

*அவர் தாவீதின் வேர் என்று சொல்வது, கிறிஸ்து தேவன் என்று பொருள்படும். தாவீது அவரை கர்த்தர் என்று அழைக்கிறார், தாவீது அவரை குமாரன் என்று அடையாளப்படுத்துகிறார்.*

*அவரிடம் தாவீதின் திறவு கோல் ருக்கிறது.*
***அதற்கு என்ன பொருள்?***
*அவருக்கு தான் மேசிய அதிகாரம் உள்ளது.*
*தாவீதின் சந்ததியில், அவர் தான் மேசியா.*

*திறவு கோல் என்பது அதிகாரத்தை குறிக்கிறது, உச்சகட்ட கட்டுப்பாடு மற்றும் இறையாண்மையின் சின்னத்தை குறிக்கிறது.*

*ராஜாவின் எல்லா பொக்கிஷங்களுக்கும் திறவு கோலை வைத்திருந்த இலக்கியாவின் குமாரன் எலியாக்கிமிற்கு, அரச கருவூலத்தின் மீது அவருக்கு அதிகாரம் உண்டு. அவர் அதன் செல்வங்களைத் திறந்து அவற்றை தன இஷ்டப்படி அவற்றை விநியோகிக்க முடியும்.*

***ஏசாயா 22:20-22, அந்நாளிலே இலக்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் என் ஊழியக்காரனை நான் அழைத்து: 21. உன் வஸ்திரத்தை அவனுக்குத் தரித்து, உன் கச்சையால் அவனை இடைக்கட்டி, உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்பேன்; அவன் எருசலேமின் குடிகளுக்கும் யூதாவின் வம்சத்துக்கும் தகப்பனாயிருப்பான். 22. தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்கு அவன் திறப்பான். ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்.***

*தாவீதின் திறவுகோல் என்பது பரலோகத்தின் அனைத்து அரச செல்வங்களுக்கும் மீது உள்ள உச்சகட்ட மேசிய அதிகாரமாகும்.*

*இயேசு கிறிஸ்து*

- ✓ *அவர் தான் பரிசுத்தர்,*
- ✓ *அவர் தான் சத்தியமுள்ளவர் மற்றும்*
- ✓ *பரலோகத்தின் அனைத்து பொக்கிஷங்களையும் அணுகக்கூடியவர், அதன் மீது முழு அதிகாரத்தையும் உடையவர்.*

*தம்முடைய சொந்த இறையாண்மையால் அவற்றை தம்முடைய மக்கள்மீது ஊற்றுகிறவர் தான் இயேசு. பரலோகத்தின் செல்வத்தை யாவருக்கும் திறக்க இறைமை அதிகாரம் உள்ளவர் அவர் தான்.*

- *எழுதுபவர் பரிசுத்தர், அனால் அவர் எதை பற்றியும் கண்டிக்கவில்லை.*
- *எழுதுபவர் சத்தியமுள்ளவர் அனால் அவர் எதை பற்றியும் கண்டிக்கவில்லை.*
- *எழுதுபவர் இறையாண்மை உடையவர், அவர் பரலோகத்தின் எந்த ஆசீர்வாதங்களையும் பூட்டவில்லை.*

*அவர் தான் தாவீதின் வேர், தாவீதை உலகத்திற்கு கொண்டு வந்தவர் அவர் தான். அவர் தாவீதின் சந்ததி, தாவீதின் வரிசையில் பிறந்தார். அவர் தான் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜா, மேசியா. பரலோகத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் வழங்க அவருக்கு முழு அதிகாரம் உண்டு.*

***V7,* ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது;**

**அதற்கு என்ன பொருள்?**

*யார் ராஜ்யத்தில் நுழைய வேண்டும் என்பதை தீர்மானிப்பவர் இயேசு.*

*அவர் தான் திறவு கோலை வைத்திருக்கிறார்.*

***வெளி 1:18, மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக் கிறேன்.***

- ✓ *இயேசுவிடம் நரகத்திற்கான திறவுகோல் உள்ளது.*
- ✓ *இயேசுவிடம் பரலோகத்திற்கான திறவுகோல் உள்ளது.*

*இழந்ததைத் தேடவும் இரட்சிக்கவுமே இயேசு வந்தார்.*

*எனவே, இது கர்த்தராகிய இயேசு தான்.*

- ➢ *அவர் தான் பரிசுத்தர்,*
- ➢ *அவர் தான் சத்தியமுள்ளவர்,*
- ➢ *அவர் தான் பரலோகத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் தருகிறவர்,*
- ➢ *இராஜ்யத்தின் கதவை அவர் தான் திறப்பார்,*
- ➢ *அவருடைய இறையாண்மையின் விருப்பப்படி இரட்சிப்பின் கதவை திறப்பார்.*

***யோவான் 14:6, அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.***

*கிறிஸ்து இல்லாமல், நாம் ராஜ்யத்தில் நுழைய முடியாது. அவர் மட்டுமே நமக்கு உள்ளே நுழைய அனுமதி அளிக்க முடியும்.*

***பாராட்டு:***

***V 8-10, 8. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். 9. இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன் .10. என் பொறுமையைக்குறித்துச்சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.***

*அவர் பிலதெல்பியாவில் உள்ளவர்களிடம், "யாரும் பூட்ட முடியாத ஒரு திறந்த கதவை நான் உங்கள் முன் வைத்திருக்கிறேன். நான் உங்களுக்கு ராஜ்யத்தைத் திறந்துவிட்டேன். ராஜ்யத்தில் உள்ள எல்லாவற்றிற்கும் அணுகலை நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன்." இந்த அறிக்கையின் முக்கியத்துவம் என்னவென்றால், உண்மையான விசுவாசிகளிடம் நம்முடைய கர்த்தருடைய கிருபையை உறுதிப்படுத்துவதாகும்.*

*பிலதெல்பியா சபைக்கு*

- *கடிந்து கொள்ள எதுவும் இல்லை,*
- *கண்டிக்க எதுவும் இல்லை,*
- *அவர்களை தண்டிக்க எதுவும் இல்லை,*

- *அவர்களை எச்சரிக்க எதுவும் இல்லை,*
- *தீர்ப்புக்காக அவர்களை எச்சரிக்கை வேண்டிய எதுவும் இல்லை.*

*அது பரிபூரண சபையாக இல்லாததால் அது ஊக்கமளிக்கும் செய்தியாக உள்ளது. ஆனால் அது விசுவாசமுள்ள சபை, அது உண்மையுள்ள சபை.*

*விசுவாசமுள்ள சபையில் ஆண்டவரின் ஆசீர்வாதம் உள்ளது.*

*இறைவன் ராஜ்யத்திற்கான கதவுகளைத் திறந்து அதன் எல்லா பொக்கிஷங்களுக்கும் உரிமை அளிக்கிறார்.*

1. ***உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும்.***

*ஒரு சிறிய குழு கொண்ட மக்கள். அவர்கள் குறைவாக இருந்ததால் அவர்களின் வல்லமை சிறியதாக இருந்தது. இது அவர்களின் வல்லமையை மட்டுப்படுத்திய பாவ பிரச்சினை அல்ல. இது அவர்களின் வல்லமையை மட்டுப்படுத்திய பரிசுத்த ஆவியின் பிரச்சினை அல்ல. அவர்களுக்கு ஆவிக்குரிய வல்லமை இருந்தது, ஆனால் வெளிப்படையாக, அவைகள் மிகப் பெரிய அளவில் இருக்கவில்லை.*

*கர்த்தர் ஏழைகளையும், தாழ்ந்தவர்களையும், யாரும் இல்லாதவர்களையும் மற்றும் ஒன்றும் இல்லாதவர்களையும் தெரிந்தெடுக்கிறார்.ஒரு சிறிய பலம், கடுகு விதை, தானியத்தைப் போல உள்ள பலம் மலைகளை நகர்த்த முடியும். அந்த சிறிய சபையில் ஆவிக்குரிய வல்லமை அதிக அளவில் செயல்பட்டது. அவர்கள் உண்மையான விசுவாசிகளாக மற்றும் கிறிஸ்துவை உண்மையாக நேசிப்பவர்களாக இருந்தார்கள் .*

## *2.* ***என் வசனத்தைக் கைக்கொண்ட படியினாலே.***

*அவர்கள் வேதத்திற்கு கட்டுப்பட்டவர்கள். அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியும் ஒரு வடிவத்திலிருந்து விலகவில்லை.*
*கர்த்தராகிய இயேசு யோவான் 14 மற்றும் 15 அதிகாரங்களில் கைது செய்யப்படுவதற்கு முன்பு மேல் வீடு அறையிலும் ,கெத்சமனே தோட்டத்திலும் பேசிய பேசிய காரியம் இதுவே*

***யோவான் 14:15, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.***

## *3.* ***விசுவாசம்.***

*அவர்கள் விசுவாசத்தால் வகைப்படுத்தப்பட்டனர்.*

***"நீ என் நாமத்தை மறுதலியாமல்."***

*அதைச் செய்ய அவர்களுக்குள் சில அழுத்தம் இருந்தது என்பதை இது குறிக்கிறது.*

*சாத்தானின் சிங்காசனம் இருக்கும் உள்ள இடத்தில இருந்த சபை தன பெர்கமு சபை.*

***வெளி 2:13, உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும் நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், <u>சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன்</u>***

***<u>கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.</u>***

*இந்த சபை நமது கர்த்தருக்கு விசுவாசமாக இருந்தது. உபத்திரவத்தை அழுத்தத்தின் கீழ் அவை மடிந்து போகவில்லை.*

*அவர்கள் ஆதியின் அன்பை விட்டுவிடவில்லை.*
*அவர்கள் உலகை உள்வாங்கவில்லை.*
*அவர்கள் பாவத்தை சகித்துக்கொள்ளவில்லை.*

***வெளி 14:12, தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்.***

*இறுதிவரை விசுவாசத்தில் நிலைநிற்பவர்களே உண்மையானவர்கள்/விசுவாசமுள்ளவர்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையாக இருந்தனர்.*

4. ***பொறுமை.***

*அவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தார்கள். அவர்கள் தங்கள் உறுதிப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டிருந்தனர்.*

*பொறுமையாக சகித்துக்கொள்ள என் கட்டளையை அவர்கள் கடைப்பிடித்தார்கள்.*

*உபத்திரவம் இருந்தது, ஒவ்வொரு விசுவாசமுள்ள சபையும் உபாத்திரவப்படுத்தப்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.அவர்கள் உலகத்தால் வெறுக்கப் படுவார்கள் என்று கர்த்தர் அவர்களிடம் சொன்னார்.*

*அவர்கள் உபத்திரவப்பட போகிறார்கள்,*
*அவர்கள் யூதர்களால் கடுமையாக நடத்தப்படுவார்கள்,*
*அவர்கள் புறஜாதியாரால் கடுமையாக நடத்தப்படுவார்கள்.*

*இது தான் ஒரு கிறிஸ்தவருக்கு வாழ்க்கையாக இருக்கும். ஆனால் பொறுமையாக சகித்துக்கொள்ள என்ற கர்த்தருடைய கட்டளையை அவர்கள் கடைப்பிடித்தார்கள். அவருக்கு சொந்தமானது அவருக்கு வேண்டும்.*

***மத்தேயு 10:22, என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.***

***மத்தேயு 24:13, முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.***

*தேவையானது என்னவென்றால் இறுதி வரை பொறுமையாக சகித்துக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்!*

***வெளி 1:9, உங்கள் சகோதரனும் இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன்.***

*சோதனைகள் மற்றும் உபத்திரவத்தை சந்தித்த இந்த விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் பொறுமையுடன் அனைத்தையும் ஏற்று கொண்டனர், கிறிஸ்துவுடனான தங்கள் உறுதிப்பாட்டில் ஒருபோதும் அசைக்கபடவில்லை.*

*இது விசுவாசமுள்ள சபை , உண்மையுள்ள சபை .*

*பரிபூரணம் பெற்ற சபை அல்ல, ஆனால் விசுவாசமுள்ள சபை.*

*இன்றும் அப்பபடிபட்ட சபைகள் உள்ளன!*

*நமது சபை உண்மையுள்ள,விசுவாசமுள்ள சபை ஆக இருக்கிறது என்று நான் முழு மனதுடன் நம்புகிறேன்!!*

## அர்ப்பணிப்பு.

***V8, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.***

*நான் உங்களுக்கு ராஜ்யத்தை முழுமையாக அணுகுவதற்கு எல்லா உரிமையும் அளிப்பதாக இயேசு சொல்கிறார், அதை யாரும் மாற்ற முடியாது.*

*அந்த திறந்த கதவு வழியாக மற்றவர்களை ஈர்க்கக்கூடிய ஒரு சபாயக அது மாறியது.*

*இந்த திறந்த கதவு கீழ்க்காணும் காரியங்களை அதிகமாய் கொண்டுள்ளது,*

- *நற்செய்தி அறிவிக்கும் வாய்ப்பு,*
- *நற்செய்திக்கு சாட்சி,*
- *நற்செய்தி பிரசங்கித்தல்,*
- *வெளியே சென்று மக்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்பு.*

***1 கொரிந்தியர் 16, 2 கொரிந்தியர் 2, கொலோசெயர் 4*** *போன்ற அதிகாரங்களில் பவுல் சொல்லுகிறார்.*

*அந்த சிறிய சபையில் ஒரு திறந்த வாசல் இருந்தது, அந்த வர்த்தக பாதையில் அந்த நகரத்தை கடந்து வருபவர்களும், அந்த ஊரில் வசித்தவர்களும் அறிமுகப்படுத்தப்பட்டது, அவர்களில் சிலர் அந்தக் கதவுகளின் வழியாக தேவ கிருபையால் ராஜ்யத்திற்குள் நுழைந்தார்கள்.*

***1 கொரிந்தியர் 16:9, ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது: விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.***

***V9, இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்.***

*பிலதெல்பியாவில், ஒரு உள்ளூர் யூத ஜெப ஆலயத்தைக் கொண்டிருக்கும் அளவுக்கு யூத மக்கள் இருந்தனர்.*
*இந்த ஜெப ஆலயத்தை யூதர்கள் ஆக்கிரமித்தார்கள், அவர்கள் தங்களை யூதர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள், ஆனால் உண்மையில் அவர்கள் யூதர்கள் இல்லை.*

***அதற்கு என்ன அர்த்தம்?***

***ரோமர் 2:28-29, ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. 29. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது.***

*அவர்கள் உண்மையான யூதர்கள் அல்ல. அது சாத்தானின் ஜெப ஆலயம். அவர்கள் தேவனால் வழிநடத்தப்படுவதில்லை; அவர்கள் சாத்தானால் வழிநடத்தப்படுகின்றனர்.*

***யோவான் 8:44,***

*இயேசு இஸ்ரவேல் தலைவர்களை நோக்கி:, '' **நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்**'' என்று சொன்னார்.*

*அவர்கள் தங்களை யூதர்கள் என்று கூறிக்கொண்ட யூதர்கள், ஆனால் அவர்கள் உண்மையான யூதர்கள் அல்ல. அவர்களின் தந்தை தேவன் அல்ல பிசாசு தான். உண்மையான யூதர்கள் அல்லாத, இந்த யூதர்களின் யூதக் குழு, சாத்தானின் அதிகாரத்தின் கீழ் இந்த ஜெப ஆலயத்தை உருவாக்கியது, இந்த சிறிய குழுவை அது தாக்கியது என்பதில் சந்தேகமில்லை.*

*யூதர்களிடமிருந்து துன்புறுத்தல் வந்து கொண்டிருந்தது. கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடம் பேசும்போது அவர்களிடம் சொன்னார்.*

- *அவர்கள் தேவனின் உண்மையான புத்திரர் அல்ல.*
- *அவர்கள் ஆபிரகாமின் உண்மையான புத்திரர் அல்ல.*
- *அவர்கள் மரபணு, சட்டரீதியாக, சடங்கு ரீதியாக யூதர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் உண்மையான யூதர்கள் அல்ல.*

*சபை அவர்களின் விரோதத்தால் பாதிக்கப்பட்டது, சிமிர்னாவில் இதுதான் நடக்கிறது.*

***வெளி 2:9, உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.***

*சிமிர்னாவில், யூதர்களிடமிருந்து வந்த இந்த கடுமையான உபத்திரவத்தை தான் அந்த சபையை பரிசுத்தப்படுத்தி தேவன் பயன்படுத்தினார். இந்த ஏழு கடிதங்களில் ஒருபோதும் கண்டிக்கப்படாத ஒரே சபை அதுதான்.*

*சுவிசேஷத்தை வெறுத்து, உண்மையில் சாத்தானின் ஜெப ஆலயமாக இருக்கும் ஆலயத்தில் உறுப்பினர்களாக இருந்த யூத மக்களின் கைகளால் அவர்களுக்கு உபத்திரவம் ஏற்பட்டது.*

*கர்த்தர் ஒரு அற்புதமான வாக்குத்தத்தை அளிக்கிறார்: "நான் அவர்களை வந்து உன் காலடியில் விழுந்து பணிந்துகொள்வார்கள் , நான் உன்னை நேசித்தேன் என்பதை அவர்களுக்கு அதன் மூலம் தெரியப்படுத்துவேன்."*

*ஜெப ஆலயத்திலிருந்து யூத மக்கள் புறஜாதியாரை கண்டு அவர்களை பணிந்து கொண்டு, கர்த்தராகிய ஆண்டவர் நேசிக்கிற புறஜாதியார் இவர்கள் தான் என்பதை அறிந்துகொண்டார்கள்.*

*கீழே விழுந்து பணிந்து கொள்வது ஒரு தாழ்மையான மற்றும் தோற்கடிக்கப்பட்ட எதிரியின் செயலாகும்.*

*அந்த படம் துல்லியமாக அதை தான் குறிக்கிறது.*
*நான் அவர்களை வணங்க செய்வேன் என்று இயேசு கூறுகிறார்.*

***ஏசாயா 45:14-16, எகிப்தின் சம்பாத்தியமும், எத்தியோப்பியாவின் வர்த்தகலாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தகலாபமும், உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும்; அவர்கள் உன் பின்னே சென்று, விலங்கிடப்பட்டு நடந்துவந்து: உன்னுடனேமாத்திரம் தேவன் இருக்கிறார் என்றும், அவரையல்லாமல் வேறே தேவன் இல்லையென்றும் சொல்லி, உன்னைப்பணிந்துகொண்டு, உன்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 15. இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர். 16. விக்கிரகங்களை உண்டுபண்ணுகிற அனைவரும் வெட்கப்பட்டு இலச்சையடைந்து ஏகமாய்க் கலங்கிப்போவார்கள்.***

*இது தான் தாழ்மை.*

***ஏசாயா 49:23, ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்;”***

***ஏசாயா 60:14, உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைகளும் குனிந்து உன்னிடத்தில் வந்து, உன்னை அசட்டைபண்ணின யாவரும் உன் காலடியில் பணிந்து, உன்னைக் கர்த்தருடைய நகரம் என்றும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன் என்றும் சொல்வார்கள்.***

*சபையாக இருக்கும் புறஜாதியார் முன்பு அந்த யூதர்கள் அவர்களுக்கு தலைவணங்கப் போகிறார்கள். புறஜாதி*

*ஆட்சியாளர்கள் எப்போதுமே யூதர்களை வணங்க முயற்சித்தார்கள், ஆனால் இங்கே, யூதர்கள் புறஜாதியரை வணங்குகிறார்கள்.*

***இதன் அர்த்தம் என்ன?***

*பிலதெல்பியாவில் யூதர்களுக்கு இரட்சிப்பு வந்தது. அங்கு ராஜ்யத்திற்கு வாசல் திறந்திருந்தது, அதாவது அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள், கிறிஸ்துவும் ராஜ்யத்துக்குச் செல்லும் வழியை பிரசங்கித்தார்கள்; அவர்களை உபத்திரப்படுத்தினவர்களையும் , அவர்களைத் உபத்திரப்படுத்தின யூதர்களையும் தேவன் கிருபையை இரட்சித்தார்.*

*தேவன் வரலாற்றில், யூதர்களையும் புறஜாதியாரையும் இரட்சித்து வருகிறார், எதிர்காலத்தில் முடிவில் யூதர்கள் அவரை விசுவாசிப்பார்கள்.*

***ரோமர் 11:13-14, புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்; புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று, 14. என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன்.***

***ரோமர் 11:26-27, இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்; 27. நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது.***

*யூதர்கள் அதை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினம்!*

*யோனா, புறஜாதியின் இரட்சிப்பை ஏற்றுக்கொள்வது அவருக்கு கடினம் ஆக இருந்தது. சபையின் வரலாறு முழுவதும் கடைசியில், தேவனின் ஆசீர்வாதம் சபையின் மீதி இருப்பதை யூதர்கள் காண்பார்கள். தேவன் நம்மை நேசித்தார் என்பதை அவர்கள் காண்பார்கள்.*

***V10,* என் பொறுமையைக்குறித்துச்சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.**

*வரலாற்றில் நாம் பார்க்க கூடிய எதுவும் வீணாக நடைபெறவில்லை.*

*இது தவிர வேறு சிலருக்கு வரலாறு மாயையாக இருக்கலாம், சில இயற்கை பேரழிவுகள், சில போர், சில உயர்ந்த உபத்திரவம். உபத்திரவம், நிச்சயமாக, பெரிய அலைகளில் நடைபெற்றது. ஆனால் சுட்டிக்காட்ட எந்த வரலாற்று நிகழ்வும் நம்மிடம் இல்லை.*

*இது முழு உலகிலும் இருந்து வரும், அது அவர்களின் கண்ணோட்டத்தில், அவர்களின் உலகம், ஆசியா மைனர் பகுதியாக இருக்கலாம்.*

*இது வரலாற்றில் நிகழ்ந்த ஏதோ ஒரு தற்காலிக நிகழ்வாக இருந்து இருந்தால், அந்த சிறிய சபை காப்பாற்றப்பட்டு இருக்கும். ஆனால் இங்கே இன்னும் அதற்கும் மேலாக ஏதோ நடந்து இருக்கலாம்.*

**சோதனை/ உபத்திரவ காலம் என்றால் என்ன?**

*இது பிலதெல்பியா நகரத்தில் ஏதோ எளிய தற்காலிக உபத்திரவம் போல் தெரியவில்லை.*

- *இது நிரந்தர அல்லது நித்திய சோதனை அல்ல.*
- *அது உள்ளுக்குள் நடந்த காரியம் அல்ல.*
- *பாரபட்சம் காட்டப்பட்டதாக தெரியவில்லை.*
- *இது பூமியிலுள்ள அனைவரிடமும், அவிசுவாசிகள் மேல் வருகிறது, ஆனால் விசுவாசமுள்ள சபை மீது அது வராது.*

*பூமியில் கடுமையான நியாயதீர்ப்பு காலம் வரும்போது மீட்பின் வரலாற்றின் மொத்தத்தையும் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகிறாரா?*
*மகா உபத்திரவமான தனியியலின் எழுபது வாரம் என்று வேதாகமம் அழைக்கும் நேரமா?*
*வெளிப்படுத்துதல் 6 முதல் வெளிப்படுத்துதல் 18 வரை நமக்கு விவரிக்கப்பட்டுள்ள நேரமா?*
*புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு பேரழிவு பூமியில் வரும் முத்திரைகள் தரும் தீர்ப்புகள், எக்காள தீர்ப்புகள் மற்றும் வெள்ளை சிங்காசன தீர்ப்புகளின் வரிசைகளில் விவரிக்கப்பட்டுள்ள காலமா இது?*

*அது எதுவாக இருந்தாலும், நம்முடைய கர்த்தர் சபையை நோக்கி, சொல்கிறார் "நான் உங்களை சோதனையிலிருந்து இரட்சிப்பின். தற்போதைய உபத்திரவம் போதுமானதாக இருக்கும். உலகம் முழுவதும் வரும் கடைசி உபத்திரவம் உண்மையான விசுவாசமுள்ள சபையின் மீது வராது."*

*அந்த கடைசி கால சோதனை உள்ளே சபை போகாதா?*

*எடுத்துக்கொள்ளுதல் பின் வரும் உபத்திரவத்தை அறிந்துகொள்ள இந்த வசனங்கள் நமக்கு உதவுகிறது!*

*வரவிருக்கும் நித்திய கோபத்திலிருந்து நாம் இரட்சிக்கப்படுவோம் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.*

***1 தெசலோனிக்கேயர் 1:10, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.***

*"நீங்கள் கீழ்ப்படிந்து சகித்ததால், வெகுமதியாக, நான் உங்களை உபத்திரவத்திற்குள் தள்ளுவேன், உங்களை உபத்திரவத்திற்கு ஆளாக்குவேன்."*
*அது ஒரு ஆசீர்வாதமாகத் தெரியவில்லை தானே.*

*"சோதனை காலத்திலிருந்து நான் உங்களைக் இரசிப்பேன், அதிலிருந்து உன்னைத் தடுத்து நிறுத்துவேன்." அவர்களுக்கு விடுதலை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது.*

***The phrase in the Greek is 'tre ek', meaning 'out of' not 'through it'***

***V 11, இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.***

***"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்"***

***<u>எபேசுவில் உள்ள சபைக்கு</u>,***

***வெளி 2:5, ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.***

***<u>பெர்கமுவில் உள்ள சபைக்கு</u>,***
***வெளி 2:16, நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.***

***<u>சர்தையில் உள்ள சபைக்கு</u>,***
***வெளி 3:3, ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்.***

*அந்த சபைகளின் காரியங்களை பொறுத்தவரை, இயேசு அவர்களை நியாயந்தீர்க்க வருவதாக என்று கூறினார்!*

*ஆனால் இங்கே இயேசு அந்த கடைசி கால சோதனைக்கு உட்படுத்தமாட்டேன் என்று கூறுகிறார். எனவே, அவர்களை அதிலிருந்து வெளியே எடுக்க அவர் விரைவாக வருகிறார்.*

*உங்கள் கிரீடத்தை யாரும் எடுத்துக்கொள்ளாதபடி உங்களிடம் இருப்பதை பிடித்துக் கொள்ளுங்கள்.*

*உங்கள் இரட்சிப்பை நீங்கள் இழக்க முடியாது, ஆனால் உங்கள் வெகுமதியை இழக்கலாம்.*

*உங்கள் பரலோக வெகுமதியை நீங்கள் இழக்கலாம். உண்மையுள்ள விசுவாசியாக நீங்கள் பரலோக வெகுமதியைக் குவிக்க முடியும். நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பரலோகத்தில் புதையல்களை சேர்க்க முடியும்.*

***2 யோவான் 1:8, உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.***

## ***ஆலோசனை.***

***V 12, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதியநாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.***

***ஜெயம்கொள்ளுகிறவன் யார்?***

***1 யோவான் 5:4-5, தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். 5. இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?***

*நித்திய ஆசீர்வாதம். நான்கு நித்திய ஆசீர்வாதங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.*

1. *“***அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை***”*

*நீங்கள் நித்தியமாக பரலோகத்தில் வாழப் போகிறீர்கள்! பரலோகத்தில் நிரந்தர மற்றும் உங்களை மாற்ற முடியாத இடம் உண்டு.*

***1 பேதுரு 1:4-5, அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். 5. கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.***

*சபை பூகம்பங்களுக்கு உள்ளானது, இது அவர்களின் உலகத்தை பேரழிவிற்கு உட்படுத்தியது, இது ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது. ஒருவேளை அவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டு இருக்கலாம், ஒருவேளை அவர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டு இருக்கலாம், ஆனால் பரலோகத்தில் உள்ள தேவ ஆலயத்தில் அவர்களுக்கு அசைக்க முடியாத இருந்தது.*

***தூணாக இருப்பதன் அர்த்தம் என்ன?***

*பெரிய ஆலயங்களில் உள்ள தூண்கள் மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டன. இந்த ஆலய தூணில் செதுக்கப்பட்ட ஒரு பிரபலமான அல்லது மரியாதைக்குரிய நபரின் பெயர் இருக்கும்.*

*நம்முடைய பெயர்கள் பரலோக ஆலயத்தில் செதுக்கப்பட்டிருக்கும்.*

### *2.* என் தேவனுடைய நாமத்தை அவன்மேல் எழுதுவேன்

***It is of possession, or ownership* இது உடைமை, அல்லது உரிமை.**

*பரலோகத்தில் ஒரு ஆலயம் இருக்கப் போகிறது, அந்த ஆலயத்தில் உள்ள ஒரு தூண் உங்கள் பெயரைக் கொண்டிருக்கும், தேவன் உங்கள் பெயரை அந்த தூணின் மீது எழுதுவார்.*

*இது நம்பமுடியாத கிருபை!*

*நாம் என்றென்றும் தேவனுக்கு சொந்தமானவர்களாக இருப்போம், என்றென்றும் கனப்படுத்தப்படுவோம்.*

### *3.* தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்

*பரலோகத்தின் ஆலயத்தின் தூணில் நமது பெயர்கள் எழுதப்பட்டு இருக்கும், நாம் பரலோகத்தின் நித்திய குடிமகன்களாக/பிரஜைகளாக இருப்போம்.*

*தேவன் தம்முடைய நாமத்தை நம்மீது எழுதுவார். நாம் அவருக்கே உரியவர்கள், என் தேவனுடைய நகரத்தின் பெயர், புதிய ஜெருசலேம் அது தேவனிடமிருந்து பரலோகத்திலிருந்து இறங்குகிறது, இது நம்முடைய நித்திய குடியுரிமையைக் குறிக்கிறது. என்றென்றும் நாம் நித்திய*

*நகரத்தின் மீது அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் பெற்ற குடிமக்கள் ஆகா இருப்போம்.*

### *4.* என் புதியநாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

*அந்த நாமம் என்னவாக இருக்கும்?*

*இயேசு மரித்தபோது, பிதா அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, எல்லா நாமத்திற்கு மேலான ஒரு நாமத்தை அவருக்கு கொடுத்தார்!*

***கர்த்தர் என்கிற நாமம்!***

*அந்த நாமம்எதுவாக இருந்தாலும், அது தேவனுடையதாக இருந்தாலும் அல்லது நாம் கேள்விப்படாத நாமமாக இருந்தாலும், அது அவருடைய நித்திய கம்பீரத்தின் முழுமையை உள்ளடக்கிய நாமமாக இருக்கும்.*

## ***முடிவுரை:***

*இது கொஞ்சம் பலம் கொண்ட ஒரு சிறிய சபை,*

- ✓ *Loyal உண்மையானது,*
- ✓ *Obedience கீழ்படிதலுள்ளது,*
- ✓ *Endurance பொறுமை/சகிப்பு தன்மை கொண்டது மற்றும்,*
- ✓ *Faithfulness விசுவாசமுள்ளது.*

*கர்த்தர் வானத்தின் கதவுகளைத் திறந்து ராஜ்யத்தின் செல்வத்தை நமக்கு கிடைக்கச் செய்தார்.*

*அந்த திறந்த கதவுகளுக்கு மக்களை அழைத்து வர அந்த சிறிய சபை தேவனால் பயன்படுத்தப்பட்டது, தேவனுடைய ஆவி அவர்களை ராஜ்யத்திற்குள் கொண்டு வந்தது.*

*இந்த சபை அத்தகைய ஒரு சுவிசேஷ தாக்கத்தை ஏற்படுத்தியது, அந்த சபையை துன்புறுத்திய யூத மக்கள் கூட ஒரு நாள் அவர்கள் முன்பு பணிந்து குனிந்து அவர்களை வணங்கி சுவிசேஷத்தை தழுவினார்கள்.*

*அவர்கள் தற்காலிக மற்றும் நித்திய உபாத்திரவத்திலிருந்து அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார்கள்.*

*அவர்களுக்கு பலன் அளிக்க கர்த்தர் வருவார்.*
*பரலோக ஆலயத்தில் அவர்களின் பெயரை கொண்ட ஒரு தூணைக் கொடுப்பார்,*
*அவர்கள் மீது தேவன் தமது நாமத்தை எழுதுவார்,*
*அவர்களின் குடியுரிமையைக் குறிக்கும் நகரத்தின் நாமத்தை எழுதுவார்,*
*கிறிஸ்துவின் புதிய நாமத்தை எழுதுவார்.*

- ✓ ***We are God's நாம் தேவனுடையவர்கள்,***
- ✓ ***We are Christ's நாம் கிறிஸ்துவினுடையவர்கள்,***
- ✓ ***We are citizens of heaven நாம் பரலோகத்தின் குடிமக்கள்,***
- ✓ ***We will be forever honoured நாம் நித்தியத்திற்கும் மகிமைப்படுத்தப்படுவோம்!***

***ஆமென்!***